# 6.0 - கடந்த கால பல்தேர்வு வினாக்கள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# கடந்த கால பல்தேர்வு வினாக்கள்

**சோளப் பயிர்ச்செய்கையொன்றின் நாற்றுப் பருவம் 20 நாட்களாகவும், மாறுபடும் ஆவியாதல் ஆவியுயிர்ப்பு நாளொன்றுக்கு 8.9mm ஆகவும் Kc பெறுமானம் 0.5 ஆகவும் இருப்பின் அழிப்பருவத்திற்குமான ஆவியாதல் ஆவியுயிர்ப்பை காண்க?**

1. 8.9mm 2. 89.0mm 3. 4.45mm 4. 44.5mm 5. 445mm

**ஒரு ஹெக்டெயர் பயிர் செய்யும் நிலத்தின் நாளாந்த ஆவியாதல் ஆவியுயிர்ப்பு 5.5mm எனின் நாளாந்தம் அவ் நிலத்திற்கு தேவையான நீரின் அளவு யாது?**

1. $0.55m^3$ 2. $0.055m^3$ 3. $5.5m^3$ 4. $55.0m^3$ 5. $550m^3$

**சாய்வான மற்றும் காற்று அதிகமான பிரதேசத்திற்கு மிக பொருத்தமான நீர்ப்பாசன முறை யாது?**

1. துளி நீர்ப்பாசனம்
2. தூவல் நீர்ப்பாசனம்
3. பாத்தி நீர்ப்பாசனம்
4. மோதிர நீர்ப்பாசனம்
5. குமிழ் நீர்ப்பாசனம்

**வறள் வலயப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய மிகப் பிரதான காரணி?**

1. நீரின் ஆழம்
2. நீரின் மூலம்
3. நீரின் கனவளவு
4. நீர் கிடைக்கும் நேரம்
5. நீரின் உவர்த்தன்மை

**குறித்தவொரு நீர்ப்பாசன தொகுதியில் நீர் முதலில் இருந்து வெளிவிடப்பட்ட நீர் 8000l ஆனால் பயிர்ச்செய்கை நிலத்திற்கு கிடைத்த நீரின் அளவு 6000l எனின் இந்த நீர்ப்பாசன தொகுதியின் நீர் கொண்டு செல்லும் வினைத்திறன் யாது?**

1. 85% 2. 80% 3. 75% 4. 70% 5. 60%

தொகுப்பு : திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த,தொ,தொ, (வ/ தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம் )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நீர்ப்பாசனம் தொடர்பான கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை தெரிவு செய்க?

கூற்று I மண் ஆழம் அதிகரிக்கும் போது தேக்கி வைக்க கூடிய நீரின் அளவு குறைவடையும்.

கூற்று II சாய்வான தரையில் பற்றி வைத்திருக்கத்தக்க கூடிய நீரின் அளவு குறையும்.

கூற்று III மண் கட்டமைப்பின் அடிப்படையில் நீர் வடிப்பு தீர்மானிக்கப்படும்.

1. கூற்று I,II சரி
2. கூற்று II,III சரி
3. கூற்று I,III சரி
4. கூற்று I,II,III சரி
5. கூற்று I,II,III பிழை

குறித்த பயிர் நிலமொன்றின் ஆவியாதல் ஆவியுயிர்ப்பு நாள் ஒன்றுக்கு 7mm ஆகும். 5 நாட்களுக்கு ஒரு முறை மாத்திரமே பயிர் நிலத்திற்கு உள்ளூர் நீர்ப்பாசன அதிகாரக்குழு நீரைக் கிடைக்கச் செய்கின்றது. எனவே இவ் வயலின் நீர்ப்பாசன வட்டம் ஒன்றுக்கு தேவையான இழிவான நீர் தேவை?

1. 0.7mm 2. 1.4mm 3. 5.0mm 4. 7.0mm 5. 35.0mm

மைய நீக்க பம்பி பற்றிய கூற்றுக்களில் சரியானது?

1. தொடர்ச்சியான நீர் நிரலைப் பேண முடியாது.
2. உயர் அமுக்கத்தை சகிக்கும் தன்மை உடையவை.
3. அதிக உயரத்திற்கு நீரைப் பம்புவதற்கு வினைத்திறனானது.
4. சேறு மணல் போன்றவை கலந்த நீரைப் பம்மலாம்.
5. சராசரியாக உறிஞ்சல் ஏறத்தாழ 3m ஆகும்.

நீர்ப்பாசனத்திற்காக நீர் முதலை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

கூற்று I நீர் முதலில் இருந்து பயிர் செய் நிலத்துக்கான தூரம்.

கூற்று II நீர் முதலில் இருந்து பயிர் செய் நிலத்துக்கு கொண்டு செல்வதற்கான செலவு.

கூற்று III நீரில் உள்ள பார உலோகங்களின் செறிவு.

1. கூற்று I,II
2. கூற்று II,III
3. கூற்று I,III
4. கூற்று I,II,III
5. யாவும் பிழை

தொகுப்பு : திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த,தொ,தொ, (வ/ தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிலம் பண்படுத்த முன்னரும், பின்னரும் நிரம்பல் நிலையில் மண்ணின் நிறை முறையே 30g, 40g எனவும் அம் மண் மாதிரி 24மணித்தியாலங்கள் நீர் வடிய விடப்பட்ட போது ஒவ்வொரு மண் மாதிரியில் இருந்தும் 40% நீர் வடிக்கப்பட்டது எனின் நிலம் பண்படுத்த முன், பண்படுத்திய பின் எடுத்த மாதிரிகளிலுள்ள நீர் அளவுகள் யாது.

1. 18,24   2. 20,24   3. 22,26   4. 24,28   5. 26,30

பின்வரும் கூற்றுக்களை கருத்திற் கொள்க.

பயிரொன்று நீர்த்தேவையை(WR) கணிப்பதற்கு பயன்படு மழைவீழ்ச்சி பயன்படுத்தப்படுகின்றது. பயன்படு மழைவீழ்ச்சி தங்கியிருப்பது

A. கிடைக்கப்பெற்ற மொத்த மழைவீழ்ச்சியில்

B. மேற்பரப்பு ஓடி வழிதலில்

C. ஆழமான கீழ் வடிதலில்

D. இடை மறித்தலில்

E. பயிரின் நீர் நுகர்வுப் பயன்பாட்டில்

மேற்கூறியவற்றில் சரியான கூற்றுக்கள்?

1. A,B,C,D ஆகியன மாத்திரம்.
2. A,B,C,E ஆகியன மாத்திரம்.
3. A,B,D,E ஆகியன மாத்திரம்.
4. A,C,D,E ஆகியன மாத்திரம்.
5. B,C,D,E ஆகியன மாத்திரம்.

கீழ்வரும் இரு வினாக்களிற்கு தரப்பட்ட படத்தை அடிப்படையாக கொண்டு விடை தருக.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**மேற்குறித்த வரிப்படத்தில்**

1. A,B ஆகிய இரண்டும் ஆட்டீசியன் கிணறுகள் ஆகும்.
2. A,B ஆகிய இரண்டும் விவசாயக் கிணறுகள் ஆகும்.
3. A,B ஆகிய இரண்டும் இயற்கை ஊற்றுக்கள் ஆகும்.
4. A ஒரு ஆட்டீசியன் கிணறு ஆகும்.
5. A ஒரு வீட்டுக் கிணறு ஆகும்.

**மேற்குறித்த வரிப்படத்தில்**

1. A,B ஆகிய இரண்டிலும் நீர் தொடர்ச்சியாக பாயும்.
2. A யில் நீர் தொடர்ச்சியாக பாயும் அதேவேளை B யில் நீர் அவ்வாறு பாய்வதில்லை.
3. B யில் நீர் தொடர்ச்சியாக பாயும் அதேவேளை A யில் நீர் அவ்வாறு பாய்வதில்லை.
4. A,B ஆகிய இரண்டிலும் நீர் தொடர்ச்சியாக பாய்வதில்லை.
5. B யில் பருவகாலத்தில் பாய்வதுடன் A யில் நீர் அவ்வாறு பாய்வதில்லை.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk